# இயல் 6.3 - விகிதம்

## பயிற்சி எண் :: 6.3.2.3.A

ஓரலகு முறை - வரையறை

### உதாரணத்துடன் விளக்கம்

3 பந்துகள் அடங்கிய பெட்டியின் விலை ₹12. என்றால், 2 பந்துகளுக்கு எவ்வளவு தொகை கொடுக்க வேண்டும்?




இவ்விடையை அடைவற்கு, முதலில் ஒரு பந்தின் விலையை கண்டுபிடிக்க வேண்டும். அதன்பின், வரும் மதிப்பை 2-ஆல் பெருக்கினால் நமக்கு 2 பந்துகளின் விலை கிடைத்துவிடும்.

---

மூன்று பந்துகள் அடங்கிய பெட்டியின் விலை $= ₹12$

அவ்வாறெனில், ஒரு பந்தின் விலை $= \left(\frac{12 \times 1}{3}\right) = ₹4$

எனவே, இரண்டு பந்துகளின் விலை $= (₹4 \times 2) = ₹8$

இரண்டு பந்துகளின் விலை ₹8 ஆகும்.

இவ்வாறு ஒரு அலகின் மதிப்பைக் கண்டுபிடித்து அதிலிருந்து நமக்கு வேண்டும் விடையை பெருக்கற்பலனின்மூலம் அடையும் முறையை நாம் **ஓரலகு முறை** என அழைக்கிறோம்.

Sum & solution prepared on Saturday 5th June, 2021 :: 20:07 Hrs.
All rights related to content above such as creation of the problem, solution, voice over, Video creation are reserved to V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046. Regd :: 4/16/2020 dt. January 31, 2020.